*தற்போது மதுரை மத்திய சிறைக்கும், வளரிளம் சிறைவாசிகள் மதுரை மாவட்டம், மேலூரில் உள்ள பார்ஸ்டல் பள்ளிக்கும் கொண்டு செல்லப்படுகின்றனர். எனவே, இச்சிறைவாசிகளை தேனி மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களில் ஆஜர்படுத்துவதில் உள்ள இடர்பாடுகளைக் களையவும், மதுரை மத்தியச் சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளியில் இட நெருக்கடியைக் குறைக்கவும், 14 கோடி ரூபாய் செலவில் தேனி மாவட்டத்தில் 200 சிறைவாசிகள் தங்கும் வகையில், 'பார்ஸ்டல்' பள்ளியை உள்ளடக்கிய ஒரு மாவட்டச் சிறை அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*சிறைப் பாதுகாப்புப் பணிகள் மற்றும் அவசர கால நேர்வுகளில் பணிபுரிந்திட, சிறைக் களப் பணியாளர்கள் சிறை வளாகத்திலேயே வசிக்க வேண்டியது அவசியமாகும். எனவே, சிறைப் பணியாளர்களின் குடியிருப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஆண்டுதோறும் 100 குடியிருப்புகள் கட்ட அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. அதன்படி, 2012–2013 மற்றும் 2013–2014 ஆம் ஆண்டுகளில் தலா 100 குடியிருப்புகளைக் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது. அக்கொள்கை முடிவின் தொடர்ச்சியாக, 2014–2015 ஆம் ஆண்டில் 13 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் 100 குடியிருப்புகள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள், சிறைவாசிகள் மற்றும் சிறைத் துறைப் பணியாளர்கள் கூடுதல் வசதிபெற வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11–10*

## (இ) மாநில தரவு மையத்தை வலுப்படுத்துதல், மாணவர்களுக்கு மேகக் கணினி சார்ந்த சேவைகள், தமிழ் இணையவழிக் களஞ்சியம், அரசு கேபிள் டி.வி.மூலம் இணைய சேவைகள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *அடுத்து, தகவல் தொழில்நுட்பவியல் துறை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புறநானூற்று வரிகளுக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில், அறிவியல் யுகத்தில் அளப்பரிய வளர்ச்சியினைப் பெற்றிருக்கின்ற தகவல் தொழில்நுட்பத்தின்மூலம் பொதுமக்களுக்கான சேவைகளை*

2014 ஆகஸ்ட் 11] [செல்வி ஜெ ஜெயலலிதா]

*விரைந்து வழங்கி வருகின்ற எனது தலைமையிலான அரசு அதனை மேலும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் முனைப்புடன் எடுத்து வருகிறது.*

*அந்தவகையில், நடப்பு ஆண்டில் கீழ்க்காணும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்:*

*1. தமிழ்நாடு மாநில தரவு மையம், அதாவது* Tamil Nadu State Data Centre, *தற்போது வணிக வரித் துறை, தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், சென்னை மாநகராட்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, மெட்ரோ இரயில் திட்டம் உள்ளிட்ட 15–க்கும் மேற்பட்ட அரசுத் துறைகள் மற்றும் திட்டங்களின் கணினி சார்ந்த சேவைகளை வழங்கி வருகிறது. இன்னும் பல அரசுத் துறைகள் தங்களது தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளை அதிக அளவில் பொதுமக்களுக்கு அளித்திட முனைந்து வரும் இத்தருணத்தில், தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் இத்தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை. அரசுத் துறைகளில் அதிகரித்து வரும் தகவல் உட்கட்டமைப்பு தேவைகளைக் கருத்தில்கொண்டு, 5,000 சதுர அடி பரப்பளவில் புதிய கட்டடம் ஒன்று கட்டி, அதில் 40 அடுக்குகளை,* Racks *அமைத்து 40 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு மாநில தரவு மையத்தின் நிலை உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*2. மின் ஆளுமைக்கான தகவல் தொழில்நுட்ப சேவைகளை தடையில்லாமல் வழங்குதல் அவசியமான ஒன்றாகும். ஆனால், இயற்கைச் சீற்றங்களான பூகம்பம், வெள்ளம் போன்றவை தரவு மையப் பாதுகாப்பிற்கு சவாலாக உள்ளன. எனவே, இச்சேவைகளுக்கான தரவுகளை பேரிடர் மீட்பு மையம் தவிர மாநகரில் உள்ள வேறு ஓர் இடத்திலும் நகல் ஏற்றுவது அவசியமாகும். அரசின் மின் ஆளுமை சேவைகளுக்கான தரவுகளை, மாநில தரவு மையத்திலிருந்து உடனுக்குடன் மற்றோர் இடத்தில் நகல் ஏற்றம் செய்யும்பொருட்டு, 1,250 சதுர அடி பரப்பளவில் ஒரு பேரிடர் தரவு மீட்பு மையம் அதாவது* Near Line Disaster Recovery Centre *5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 ஆகஸ்ட் 11

*3.* தமிழக அரசு "tn.gov.in" என்ற இணைய வரம்பில் Domain Name-ல் அலுவல்சார் தொடர்புக்கான மின்னஞ்சல் முகவரிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இணைய பாதுகாப்பில் உள்ள சிக்கல்கள் மற்றும் அரசுத் துறை தகவல்களின் இரகசியத் தன்மை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, அரசுத் துறைகள் மற்றும் அரசுத் துறை அலுவலர்களின் அலுவல் சார்ந்த மின்னஞ்சல் முகவரிகளையும், மின்னஞ்சல்களையும் நிருவகிக்க ஒரு திடமான, கட்டுறுதியான மின்னஞ்சல் தொகுப்பினை தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் செயல்படுத்துவது அவசியமாகிறது. சிறந்த, விரைவான, பாதுகாப்பான மற்றும் செயல்திறன் கொண்ட மின்னஞ்சல் தொடர்பினை பல்வேறு இயங்கு தள உதவியுடன் அளிக்கும் வகையில், தமிழ்நாடு அரசின் மின்னஞ்சல் தொகுப்பு ஒன்று *1* கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் செயல்படுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*4.* தமிழ்நாடு முழுவதும், இதுவரை *20* இலட்சத்துக்கும் மேற்பட்ட மடிக்கணினிகள் மாணவ, மாணவியருக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இம்மடிக்கணினிகளை சிறந்த முறையில் உபயோகப்படுத்துவதற்கான தகவல் தொழில்நுட்ப வளங்களைக் குறைந்த கட்டணத்தில் வழங்குவது அவசியமாகிறது. இளைஞர்களின் தொழில்முனையும் திறனை மேம்படுத்தும் வகையிலும், அவர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் வகையிலும், மாணவர்கள் மற்றும் இளம் தொழில் முனைவோர்களுக்கான மேகக் கணினி சார்ந்த சேவைகள், அதாவது Cloud Services மற்றும் இணையப் பதிவேற்ற சேவைகள், அதாவது Web–hosting Services ஆகியவற்றை குறைந்த கட்டணத்தில் வழங்கும் திட்டம் *50* இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11–15*

*5.* உலகெங்கும் உள்ள தமிழ் அறிஞர்கள், வல்லுநர்கள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் ஒருங்கிணைந்து இணையவழி பங்காற்றி தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் வகையில், தமிழர், தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கியத்தின் சாதனைகளை உள்ளடக்கிய தமிழ் மொழி, கலை மற்றும் பண்பாட்டுக்கான விரிவான இணையவழிக் களஞ்சியம் ஒன்று தமிழ் இணையக் கல்விக் கழகத்தினால் உருவாக்கப்படும்.

2014 ஆகஸ்ட் 11] [செல்வி ஜெ ஜெயலலிதா]

*முதற்கட்டமாக இதற்கு 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*6. தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம், உயர் தர கேபிள் டி.வி. சேவையினை உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் வாயிலாக பொதுமக்களுக்கு மிகக் குறைந்த மாத சந்தா தொகையான 70 ரூபாய்க்கு வழங்கி வருகிறது. அரசு கேபிள் டி.வி. ஆபரேட்டர்கள் வாயிலாக மாநிலம் முழுவதும் அதிவேக அகண்ட அலைவரிசை சேவைகள், அதாவது* Broadband Services *மற்றும் இதர இணையதள சேவைகள், அதாவது* Internet Services *ஆகியவற்றையும் குறைந்த கட்டணத்தில் அரசு கேபிள் டி.வி. இனி வழங்கும். அகண்ட அலைவரிசை உரிமங்கள் பெற்றுள்ளவர்களுடன் இணைந்து வழங்கப்படும்.*

*எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள், தகவல் தொழில்நுட்பத்தின் கூடுதல் பயனைப் பொதுமக்களும், அரசுத் துறைகளும் அடைய வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

## (ஈ) புதிய வருவாய் வட்டங்களை உருவாக்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *அடுத்தபடியாக, வருவாய்த் துறை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சட்ட திட்டங்களை நிறைவேற்றும் முக்கிய கருவியாகவும், மக்களை நாடிச் சென்று உதவிகள் புரியும் ஆபத்பாந்தவனாகவும், அரசாங்கத்தின் ஆணிவேராகவும், நிருவாகத்தின் முதுகெலும்பாகவும், மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்தில் முக்கிய பங்கு வகிப்பதுமான வருவாய்த் துறையின் செயல்பாடுகளை மேம்படுத்தும் முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.*

*பொதுமக்களின் பயண நேரத்தைக் குறைக்கும் வகையிலும், காலதாமதமின்றி வருவாய்த் துறையின் சேவை, மக்களை விரைந்து அடைய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலும், புதிய கோட்டங்களை உருவாக்குதல், புதிய வட்டாட்சியர் அலுவலகங்களை உருவாக்குதல், ஒவ்வொரு கிராமத்திற்கும் தனியாக கிராம நிருவாக அலுவலர்களை நியமித்தல் போன்ற எண்ணற்ற நடவடிக்கைகளை கடந்த மூன்று ஆண்டுகளாக எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.*